# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**புதுடில்லியில்  இந்திய இலங்கை மன்றத்தின் 41 ஆவது பணிப்பாளர் சபை அமர்வு**

இந்திய இலங்கை மன்றத்தின் 41வது பணிப்பாளர் சபை அமர்வானது 2026 ஆகஸ்ட் 28ஆம் திகதி புதுடில்லியில் நடைபெற்றிருந்தது. இந்த அமர்வுக்கு இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா மற்றும் இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் மஹிஷினி கொலன்னே ஆகியோர் இணைத் தலைமை வகித்திருந்தனர். இந்த அமர்வில் இம்மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களான தூதுவர் மோகன் குமார், தூதுவர் பிரசாத் காரியவசம் மற்றும் திரு அசோக் மாலிக் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

2. வரலாறு மற்றும் கலாசாரம்; கல்வி, சுகாதாரம், சுற்றுச்சூழல், விவசாயம் ,பெண்கள் கல்வி மற்றும் பயிற்சிகள் உள்ளிட்ட பல்வேறு  துறைகளிலும் செயலகத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட புதிய செயல்திட்ட முன்மொழிவுகள் இந்த அமர்வில் அனுமதிக்கப்பட்ட அதேசமயம், தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்பாடுகளின் முன்னேற்றம் குறித்தும் மீளாய்வு செய்யப்பட்டது, இந்நிலையில் இளம் ஊடகவியலாளர்களுக்கான வலுவூட்டல் செயல் திட்டம், பட்டதாரி மாணவர்களுக்கான பரிமாற்றங்கள், தேயிலை தொழில்துறையைச் சார்ந்த பெண்களுக்கான வலுவூட்டல் முயற்சிகள் மற்றும் உக்கும் தன்மையுடைய சுகாதார துவாலைகள் உற்பத்தி, நூல் மொழிபெயர்ப்பு மற்றும் பதிப்பு நடன பயிற்சி செயல்திட்டங்கள் டிஜிட்டல் மற்றும் செயற்கை நுண்ணறிவை மேம்படுத்தல் செயல் திட்டங்கள், நாட்பட்ட சிறுநீரக நோய்கள் தொடர்பான அறிவுப் பகிர்வு மற்றும் விழிப்புணர்வு,  மற்றும் செயற்கை அவையவ உற்பத்திகள் மற்றும் துணைக் கருவிகள்,  கடல் சார் முகாமைத்துவம் மற்றும் உளநலம்  ஆகிய துறை சார்ந்த கல்வி ரீதியான ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளை சேர்ந்த முன்மொழிவுகளுக்கு பணிப்பாளர் சபையினால் அனுமதி வழங்கப்பட்டது.

3. பொருளாதாரம், விஞ்ஞானம், கல்வி, தொழில்நுட்பம் மற்றும் கலாசார ஒத்துழைப்பு, மற்றும் இரு நாடுகளினதும் மக்களிடையிலான புரிந்துணர்வை மேம்படுத்துதல் ஊடாக இந்திய-இலங்கை உறவுகளை வலுவாக்கும் நோக்கத்துடன் இந்திய இலங்கை மன்றமானது இரு நாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் மூலமாக 1998ஆம் ஆண்டு டிசம்பர் 28ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பம் முதல் இதுவரை இம்மன்றத்தினால் இலங்கை ரூபா 200 மில்லியனுக்கும் அதிக பெறுமதியான 600 திட்டங்களுக்கு ஆதரவு வழங்கப்பட்டுள்ளதுடன் இதில் 380 திட்டங்கள் இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

************

**கொழும்பு**
**29 ஆகஸ்ட்  2026**